**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 23-06-2023**

**கடலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-06-23 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-06-24 | 2023-06-25 | 2023-06-26 | 2023-06-27 | 2023-06-28 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 3.0 | 0.0 | 3.0 | 0.0 | 3.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 35.0 | 36.0 | 35.0 | 35.0 | 36.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 27.0 | 27.0 | 28.0 | 28.0 | 28.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 60 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 10 | 10 | 8 | 14 | 14 |
| காற்றின் திசை (கோணம்) | 230 | 250 | 250 | 250 | 230 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் வாரங்களில் இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் ஈரப்பதம் 60-70% ஆகவும், பகல் நேரங்களில் 40% ஆக இருக்க வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 35.0-36.0°C ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 27.0-28.0 °C ஆகவும் இருக்கும். காற்றின் வேகமானது மணிக்கு 8-14 கி.மீ ஆக வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

28.06.2023 முதல் 04.07.2023 வரை தமிழ்நாட்டில் மழை இயல்பை விட அதிகமாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை மற்றும் அதிகபட்ச வெப்பநிலை இயல்பாகவும் காணப்படும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் வாரங்களில் இலேசான மழைக்கு வாய்ப்பு உள்ளதால் மருந்து தெளிக்கும் போது ஒட்டும் திரவம் கலந்து தெளிக்கவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | தற்போழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் பாக்டீரியா இலைக்கருகல் நோயின் தாக்கம் அதிகமாக கணப்படுகிறது. இதன் அறிகுறிகள் இலைகளின் மேற்பரப்பில் வெள்ளை நிறக்கோடுகள் காணப்படும். நோயின் தீவரம் அதிகமாகும் போது கோடுகள் பழுப்பு நிறமாக மாறி காய்ந்துவிடும். இதை கட்டுப்படுத்த ஏக்கருக்கு காப்பர் ஹைட்ராக்சைடு 300 கிராம் என்ற அளவில் தெளிக்கவும். |
| நெல் | 1. தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் நெல் நடவு வயலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் தயாமீதாக்ஷம் 40 கிராம்/ ஏக்கர் அல்லது அசாடிராக்டின் 400 மிலி/ஏக்கர் (10000 பி.பி.எம்) என்ற அளவில் தெளிக்கவும். 2. தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த கார்போசல்பான் 400 மிலி/ ஏக்கர் அல்லது கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 600 கி/ஏக்கர் என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும். |
| கரும்பு | தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக கரும்பில் இளங்குருத்து புழுவின் தாக்கம் தென்பட்டால் அதை கட்டுப்படுத்த குளோரான்டிரனிலிப்ரோல் 18.5 SC (0.5 மி.லி/லிட்டர்) அல்லது பிப்ரோனில்5 % SC (2.0மி.லி/லிட்டர்) என்ற அளவில் தெளிக்கவும். |
| நிலக்கடலை | தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நிலக்கடலையில் இலை சுருள் பூச்சி மற்றும் அசுவினி தாக்கம் தென்பட வாய்ப்புள்ளது. அதை கட்டுப்படுத்த ஏக்கருக்கு மிதைல் டைமெட்டான் 25 EC 400 மிலி என்ற அளவில் தெளிக்கவும். |